# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI

## O.S. No. 311/2022

**PW.3** is solemnly affirmed on **17.07.2025** in accordance with the provisions of the 1969.

| Name | திருமதி. கவிதா | Husband Name | |
|---|---|---|---|
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

**முதல் விசாரணை :**

நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டது தான், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை :–**

நான் மகளிர் சுய உதவி குழுவில் வேலை பார்க்கிறேன். எனக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.20,000/– சம்பளம் கிடைக்கிறது. என்னுடைய வீடு சொந்த வீடு தான். என் கணவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் டிரான்ஸ்போர்ட் நடத்திக்கொண்டிருந்தார். அந்த டிரான்ஸ்போர்ட்டின் பெயர் கமல் டிரான்ஸ்போர்ட். தற்போது டிரான்ஸ்போர்ட் நடக்கவில்லை. 3 வருடத்திற்கு முன்னரே அதனை மூடிவிட்டோம். இதை தவிர எனக்கு வேறு வருமானம் வருகிறதா என்றால் எனக்கு வீட்டிலிருந்து ரூ.14,000/– கிடைக்கிறது. சங்கீதா என்னுடைய சகோதரி. என் சகோதரி வந்து என்னிடம் பணம் கேட்டார், அந்த பணத்தை யார் கொடுத்தது என்றால் என் கணவர் கொடுத்தார். என் சகோதரிக்கு நான் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.7,00,000/– கொடுத்தேன். என் சகோதரரி பணியாற்றுகிறாரா என்றால் பணியாற்றுகிறார். என் சகோதரரி பேர்னாம்பேட்டில் சேல்மேனாக பணியாற்றுகிறார். அது அரசு பணி என்றால் சரிதான். அவருக்கு சொந்த வீடு உள்ளது. பேரனாம்பேட்டிற்கும் கிருஷ்ணகிரிக்கும் இடையே சுமார் 120 கி.மீ. இருக்கும்.

அவர்கள் வீட்டிற்கு நான் அடிக்கடி சென்றுவருவதுண்டா என்றால் உண்டு. என் தங்கையும் வந்து செல்வார். ஜானகி அம்மா என்பவர் என்னுடைய சித்தி ஆவார். மனோஜ் என்பவர் சங்கீதாவின் மூத்த மகன் ஆவார். பார்த்தீபன் என்பவர் என் சித்தியினுடைய மகன், எனக்கு தம்பி முறை. திருமணத்திற்கு நான் பணம் கொடுப்பதாக சொல்லியிருந்தேனா என்றால் இல்லை. சங்கீதாவிடம் பணத்தை என் கணவர் தான் கொடுத்தார். நான் தான் பணத்தை எண்ணிக்கொடுத்தேன். அதில் எத்தனை நோட்டுக்கள் இருந்தது என்றால் 1,400 நோட்டுக்கள் இருந்தது, 14 கட்டுக்களாக இருந்தது. அவ்வளவு பெரிய தொகையை நான் வங்கியில் வைத்திருந்தேனா, வீட்டில் வைத்திருந்தேனா என்றால் வீட்டில் தான் வைத்திருந்தேன். மனோஜ் என்பவர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது என் தாயார் உன்னிடம் பணம் வாங்கவில்லை என்று கூறினார் என்றால் அதற்கு உன் தாயாருக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கல் இல்லை என்று நான் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

என் தங்கை என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை, எனக்கும், என் தங்கைக்கும் மன வருத்தம் என்ற காரணத்தினால், இந்த வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்களிடம் போதுமான பணம் இருக்கிறது, பணம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை, ஆகவே நான் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் எங்கள் வீட்டிலிருந்து 120 கி.மீ. தொலைவில் வசித்து வருகிறார், அவருக்கு வேலைக்கு செல்வதற்கே நேரம் சரியாக இருக்கிறது, அதனால் எங்கள் வீட்டிற்கு வந்து போக வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 23.11.2019 அன்று கிருஷ்ணகிரிக்கு அவர் வரவில்லை, குறிப்பாக அவர் என் வீட்டிற்கு வரவில்லை, அவர் என்னிடம் வந்து பணம் வாங்கி பெற்று சென்றார் என்று சொல்வது தவறானது என்றால் சரியல்ல. அந்த தேதியில் சங்கீதா எந்த புரோநோட்டும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு நிலைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R
Principal District Judge,
Krishnagiri.